கொடுக்கப்படும். இன்னொரு திட்டம் இருக்கிறது. ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம். இதன் பிரகாரம் கூட்டுறவு நெசவாளர் அல்லது தனியார் துறையில் வேலை செய்யும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் கட்டினால் 55 அல்லது 58-வது வயதில் ஓய்வு பெறும்போது 33,500 ரூபாய் பெறுவார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பட்டு கூட்டுறவு சங்கங்கள்·

620—(*வினா எண் 8879) திரு. த. பழனி : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய இடங்களில் பட்டு கூட்டுறவு சங்கம் புதியதாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அப்படி அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆற்காட்டில், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய கிராமங்களில் பட்டு கைத்தறி நெசவாளர் தொழிலாளர்கள் பல நூறு கிலோமீட்டர்களுக்குச் சென்று பல்வேறு இடங்களில் உள்ள, உதாரணமாக காஞ்சிபுரம், ஆரணி போன்ற இடங்களுக்குச் சென்று அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுடைய குடியை உயர்த்தி இல்லங்களைக் கவனிக்க முடியாமல் இருக்கிறது என்ற சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்காகப் பட்டு கூட்டுறவு சங்கம் அமைத்துத் தருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1986 மே 3]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, நூறு பேர்களுக்குக் குறையாமல் அப்படி பட்டு நெய்யும் நெசவாளர்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த தகவலின்பேரில் புதிதாக பட்டு கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, பட்டு கூட்டுறவு சங்கத்தில் இருக்கின்ற பட்டு கூட்டுறவு கைத்தறியாளர்களுக்கு அந்தந்த சங்கங்களின் வாயிலாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவரவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அந்தந்த சங்கங்களை அரசு வலியுறுத்துமா என கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே எல்லா நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள், வீடு கட்டுவதற்கான நிலம் இருக்கிறது என்று சொன்னால், வீடு கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்றபொழுது, நூறு குடும்பங்கள் இருந்தால் அங்கே கூட்டுறவு சொசைட்டி அமைக்கலாம் என்று சொன்னார்கள். கொடவாசல் பகுதியில் திருச்சேறை, இஞ்சிக்கொல்லை போன்ற இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தனியார்களிடம் சென்று குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைக் குடும்பங்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு கொடவாசலிலே ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.